DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, PANRUTI.

C C No. 57/2017

Deposition of Witness : LW3 /PW3

| Name | சந்திரசேகர் | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | வெங்கடேசன் | Caste | |
| Village | | Calling | |
| Age | | Religion | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of 23.06.2023 | | | |

(A1 to A5 absent. Petiton filed and allowed)

சாட்சி புதுப்பேட்டை காவல் நிலைய முதல் நிலை காவலர் திரு.மு.ஜெகன் (Gr.I 385) அவர்கள் அடையாளம் காட்டினார்.

**முதல் விசாரணை** --

1. நான் தற்போது பண்டரக்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். நான் தற்போது Swiggy நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது அம்மா. அ.சா.2 எனது அப்பா. பட்டியல் சாட்சி-4 எனது பாட்டி. வழக்கின் எதிரிகளை தெரியும்.

2. கடந்த 16.01.2017 அன்று மாலை சுமார் 06.00 மணியளவில் எனது பெற்றோர் கோவிலுக்கு சென்றுவிட்டு வீடு திரும்பியபோது எனது அப்பா வெங்கடேசன் எங்கள் வீட்டின் எதிரே நின்றுகொண்டிருந்தபோது, நீ என்ன பெரிய பூளா என்று அசிங்கமாக திட்டினார் . அதை என் அம்மா மணியிடம் ஏன் எனது கணவரை அசிங்கமாக திட்டுகிறார் என்று கேட்டார். அதற்கு மணி என் அம்மாவை அசிங்மாக திட்டினார் அருகில் கிடந்த சவுக்கு கட்டையை எடுத்து என் அப்பாவை அடிக்கும்போது என் அம்மா தடுத்தால் மேற்படி அடி அம்மாவின் வலது தோள்பட்டையில் பட்டது. மேற்படி மணிக்கு சம்போட்டாக அவரது பாங்களியான குருவின் மகன் அரசு, வஞ்ஜிரவேலு மகன் சிலம்பரசன், மாதவன் மகன்கள் ஆறுமுகம், கோவிந்தன் ஆகியோர்கள் மணியுடன் சேர்ந்து என் அப்பாவை அடித்தார்கள். அதில் மணி சவுக்கு கட்டையால் எனது அப்பாவின் இடது பக்க கழுத்தில் அடித்தார் . நான் மேற்படி எனது அப்பாவை அடிப்பதை வீட்டிற்குள் இருந்து பார்த்து வெளியே வந்து தடுத்தபோது கோவிந்தன் மணிகண்டன் ஆகியோர்கள் கையால் எனது வலது கை முழுங்கையில் அடித்தார்கள். அதை பார்த்து தடுக்க வெளியே வந்த எனது பாட்டி கீளியம்மாவையும் மேற்படி எதிரிகள் அசிங்கமாக திட்டி அதில் கோவிந்தன், ஆறுமுகம் தடியால் என் பாட்டியின் பின் தலையிலும், மூக்கிலும் அடித்தார்கள். அதில் பாட்டிக்கு மூக்கில் இருந்து இரத்தம் வழிந்தது. எனக்கும், எனது அப்பாவிற்கும் வெளிக்காயம் ஏதும் இல்லை எனது பாட்டியையும், எனது அம்மாவை சிகிச்சைக்காக பணருட்டி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். நாங்கள் மருத்துவமனையில் இருந்தபோது மேற்படி எதிரிகள் வீட்டிற்குள் நுழைந்து பீரோவை உடைத்து

அதில் வைத்திருந்த சொத்து பத்திரத்தை கிழித்துவிட்டு, நகையையும், பணத்தையும் எடுத்து சென்றுவிட்டார்கள். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-**

1. போலிசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் 16.01.2017 அன்று இரவு பண்ருட்டி அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். மேற்படி விசாரணையில் கோவிந்தனும், ஆறுமுகம் எனது பாட்டிய அடித்தாக சொல்லியுள்ளேன் எனறால் சொல்லியுள்ளேன். போலிசார் விசாரணையின்போது எதிரிகள் வீட்றகுள் நுழைந்து பீரோவை உடைத்து பீரோவில் இருந்த பத்திரங்களை கிழித்துவிட்டு , நகை , பணத்தை எடுத்து சென்றார்கள் என்று சொல்லியுள்ளேன் எனறால் சொல்லியுள்ளேன்.

2. சவுக்கு தடியை போலிசார் கைப்பற்றினார்களா என்றால் இல்லை. எங்களுக்கும், மணி வீட்டிற்கும் நிலப்பிரச்சனை உள்ளது என்றும், அதுசம்மந்தமாக ஏற்பட்ட பிரச்சனையில் எதிரிகள் எனது அப்பா, எனது அம்மா மீது புகார் கொடுத்து வழக்கு நிலுவையில் உள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எங்களுக்கும், எதிரிகளுக்கு இடையே உள்ள நிலப்பிரச்சனை சம்மந்தமாக எதிரிகள் எங்களிடம் கேட்டபோது நாங்கள் எதிரிகளை அடித்துவிட்டு ஓடியபோதுதான் கீழே விழுத்தில் தான் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எங்கள் மீது பதிவு செய்யப்பட்ட வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக எதிரிகள் மீது அ.சா.1 கொடுத்த பொய்யான புகார் வாக்குமூலத்திற்கு அனுசரணையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை-இல்லை.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, PANRUTI.

C C No. 57/2017

Deposition of Witness : LW2 /PW2

| Name | வெங்கடேசன் | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | முத்தய்யன் | Caste | |
| Village | | Calling | |
| Age | | Religion | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of 23.06.2023 | | | |

(A1 to A5 absent. Petiton filed and allowed)

சாட்சி புதுப்பேட்டை காவல் நிலைய முதல் நிலை காவலர் திரு.மு.ஜெகன் (Gr.I 385) அவர்கள் அடையாளம் காட்டினார்.

**முதல் விசாரணை** --

1. நான் தற்போது பண்டரக்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். நான் தற்போது மீன் வியபாரம் செய்து வருகிறேன். அ.சா.1 எனது மனைவி. பட்டியல் சாட்சிகள் 3, 4 ஆகியோர்கள் முறையே எனது மகன், அம்மா ஆவார்கள். வழக்கின் எதிரிகளை தெரியும்.

2. கடந்த 2017 ஆம் ஆண்டு, பொங்கல் கரிநாள் அன்று மாலை 06.30 மணியளவில் நானும், எனது மனைவி, எனது மகன் மற்றும் குடும்பத்தாருடன் திருவிழாவிற்கு சென்று வீடு திரும்பியபோது 1-வது எதிரி மணி என்பவர் எங்கள் தெருவில் நின்று எங்களை அசிங்கமாக திட்டினார். நான் மணியை பார்த்து ஏன் எங்களை அசிங்கமாக திட்டுகிறார் என்று கேட்டபோது மணி ஓடிவந்து கையில் வைத்திருந்த தடியால் என்னை அடிக்க வந்தார். அதை என் மனைவி மலர் மணியிடம் ஏன் என் கணவரை அடிக்கிறார் என்று கேட்டதற்கு என் மனைவியையும், அசிங்கமாக திட்டினார். அதை கேட்ட எனது அம்மா கீளியம்மாளையும் மணி தடியால் அடித்தார். மேலும், மணி , அரசு, சிலம்பு, கோவிந்தன், ஆறுமுகம் ஆகியோர்களையும அழைத்து எங்களை அடிக்க சொன்னார். மேற்படி கோவிந்தன் தடியால் எனது கழுத்தின் வலது பக்கத்தில் அடித்தார். ஆறுமுகம் என்னை தர தர வேண்டு என்னை இழுத்து சென்று சிமெண்ட்டு சாலையில் வைத்து என்னை கையாலும், காலாலும் அடித்தார். என் மகன் சந்திரசேகரனையும் மேற்படி நபர்கள் தடியால் அடித்தார்கள். மேற்படி நபர்கள் எங்கள் வீட்டிற்குள் நுழைந்து வீட்டிற்குள் இருந்த எங்களது பீரோவை அடித்து உடைத்து சேதப்படுத்தி அதில் நாங்கள் வைத்திருந்த பணம், நகை ஆகியவற்றை எடுத்து சென்றுவிட்டார்கள். மேலும் அரசு என்பவர் என்னை பார்த்து உன்னை அழித்துவிடுவேன், கொன்றுவிடுவேன் என்று மிரட்டினார். என் மனைவியும் எனது அம்மாவையும் மேற்படி நபர்களிடமிருந்து என்னை காப்பாற்ற முயன்றபோது சிலம்பு Belt டால் என்னை அடித்தார். மேற்படி நபர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து எனது மனைவியின் மலரின் முடியை பிடித்து

இழுத்து வலது தலையின் வலது புறத்தில் இருந்த முடியை அறுத்தார்கள். மேற்படி முடியை எதை கொண்டு அறுத்தார்கள் என்று தற்போது ஞாபகம் இல்லை. நானும்,எ னது மனைவி, எனது மகன், எனது அம்மா ஆகியோர்கள் சிகிச்சைக்காக பண்ருட்டி அரசு மருத்துவமனைக்கு சென்றோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-**

1. போலிசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் பொங்கல் கரிநாள் அன்று காவல் நிலையத்தில் வைத்துவிசாரித்தார்கள். போலிசார் விசாரணையில் கோவிந்தன் தான் என்னை தடியால் கழுதில் அடித்தாக சொல்லியுள்ளேன் என்றால் சொல்லியுள்ளேன். மேற்படி தடியை போலிசார் கைப்பற்றினார்களா என்றால் எனக்கு தெரியாது. நாங்கள் அனைவரும் புதுப்பேட்டை காவல் நிலையத்திற்கு வந்தோம். புதுப்பேட்டை காவல் நிலையத்தில் புகார் அளித்துவிட்டுதான் பண்ருட்டி அரசு மருத்துவமனைக்கு வந்தோம்ள ன்றால் சரதான். சிலம்புதான் என்னை பேலுட்டால் அடித்தாக போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சொல்லவில்லை. போலிசார் விரரணையின்போது எனது மனைவியின் முடியை அறுத்தாக சொல்லியுள்ளேன் என்றால் சொல்லியுள்ளேன். மேற்படி முடியை போலிசாரிடம் கொடுத்தேன் என்றால் கொடுத்தேன்.

2. போலிசார் விசாரணையின்போது எதிரிகள் எனது வீட்டிற்குள் நுழைந்து பீரோவை உடைத்து பணம், நகை எடுத்து சென்றதாக சொல்லியுள்ளேன் என்றால் சொல்லியுள்ளேன். எதிரிகளுக்கும் எங்களுக்கு நிலப்பிரச்சனை சம்மந்தப்பட்டு முன்விரோதம் காரணமாக நாங்கள் எதிரிகளை அடித்தாக எதிரிகள் எங்கள் மீது புகார் கொடுத்த வழக்கு பதிவு செய்யப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். எங்களுக்கும், எதிரிகளுக்கு இடையே உள்ள நிலப்பிரச்சனை சம்மந்தமாக எதிரிகள் எங்களிடம் கேட்டபோது நாங்கள் எதிரிகளை அடித்துவிட்டு ஓடியபோதுதான் கீழே விழுத்தில் தான் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் எனது மனைவியுடன் சேர்ந்து சிகிச்சை பெறவில்லை. எங்கள் மீது பதிவு செய்யப்பட்ட வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக எதிரிகள் மீது அ.சா.1 கொடுத்த பொய்யான புகார் வாக்குமூலத்திற்கு அனுசரணையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை-இல்லை.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, PANRUTI.

C C No. 57/2017

Deposition of Witness : LW1 /PW1

| Name | மலர் | Taluk | |
|---|---|---|---|
| Husband's Name | வெங்கடேசன் | Caste | |
| Village | | Calling | |
| Age | | Religion | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of 23.06.2023 | | | |

(A1 to A5 absent. Petiton filed and allowed)

சாட்சி புதுப்பேட்டை காவல் நிலைய முதல் நிலை காவலர் திரு.மு.ஜெகன் (Gr.I 385) அவர்கள் அடையாளம் காட்டினார்.

**முதல் விசாரணை --**

1. நான் தற்போது பண்டரக்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். நான் தற்போது கூலி வேலை செய்து வருகிறேன். பட்டியல் சாட்சிகள் 2, 3, 4 ஆகியோர்கள் முறையே எனது கணவர், மகன், மாமியார் ஆவார்கள். வழக்கின் எதிரிகளை தெரியும்.

2. கடந்த 2017 ஆம் ஆண்டு பொங்கல் கரிநாள் அன்று மாலை 06.00 மணியளவில் திருவிழாவிற்கு நான் எங்கள் குடும்பத்துடன் சென்றுவிட்டு வீட்டிற்கு வந்து எங்கள் வீட்டின் உள்ளே நுழையும்போது ராமலிங்கம் மகன் மணிகண்டன் என்னையும், எனது கணவரை வெங்கடேசனையும், நாராக்கூலி, தேவடியா பையா, என்று அசிங்கமாக திட்டினார். அது சம்மந்தமாக எனது கணவர் மணி இடம் ஏன் எங்களை அசிங்கமாக திட்டுகிறார் என்று கேட்டபோது மணி என் கணவரை தடியால் அடிக்க முற்பட்டபோது நான் அதை தடுக்க முயன்றபோது எனது முதுகின் வலது புறத்தில் அடித்தார். பின்னர் நாங்கள் புதுப்பேட்டை மருத்துவமனைக்கு கிளம்ப முற்பட்டபோது, சிலம்பு, அரசு, கோவிந்தன், ஆறுமுகம் ஆகியோர்கள் மணிக்கு சம்போட்டாக தடியால் என்னையும், என் கணவரையும் அடித்தார்கள். அதை தடுக்க வந்த மாமியார் கீளியம்மாளை மேற்சொன்ன மணி , சிலம்பு, கோவிந்தன் ஆறுமுகம், அரசு ஆகியோர்கள் எனது மாமியாரை கீழே தள்ளி நெஞ்சிலும், முக்கிலும், தடியால் அடித்தார்கள்.

3. நாங்கள் சிகிச்சைக்காக பண்ருட்டி அரசு மருத்துவமனைக்கு சென்றிருந்போது மேற்சொன்ன எதிரிகள் அனைவரும் எங்கள் வீட்டில் புகுந்து வீட்டிற்குள் இந்து பொருட்களை அடித்து சேதப்படுத்தியும் பீரோவில் வைத்திருந்த 2 1/2 பவுன் தங்க தோடு, ஜிமிக்கி, 1 பவுன் செயின் ஆகியவற்றை எடுத்து சென்றுவிட்டார்கள். நான் பீரோவில் வைத்திருந்த எங்கள் சொத்து சம்மந்தப்பட்ட பத்திரத்தையும், கிழத்து விட்டார்கள். மேற்படி எங்களை தாக்கிய சம்பத்தின்போது

அதை தடுக்க வந்த எனது மூத்த மகன் சந்திரசேகரனையும் மேற்படி எதிரிகள் தடியால் வலது கையில் அடித்தார்கள். நாங்கள் மருத்துவமனைக்கு செல்லும் வழியில் மணிகண்டன் கருங்கல்லால் எனது வலது பக்க முதுகில் அடித்தார். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனு வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி புகார் வாக்குமூலத்தை நான் பண்ருட்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது அங்கு வந்த புதுபேட்டை காவல் நிலைய போலிசார் மேற்படி சம்பவம் சம்மந்தமாக விசாரித்து புகார் வாக்குமூலம் வாங்கினார்கள். மேற்படி புகார் வாக்குமூலத்தில் நான் கையொப்பம் செய்தேன். **மேற்படி புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1/அ.சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை இவ்வழக்கு சம்மந்தமாக விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-**

1. என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தாக சொல்லப்படும் தேதி என்ன என்றால் 2014 ஆம் ஆண்டு, தை மாதம், 07 ம் தேதியாகும். அதன்பின்னிட்டு போலிசார் விசாரித்தார்களா என்றால் மருத்துவமனையில் இருந்தபோது விசாரித்தார்கள். இவ்வழக்கு சம்பவத்தில் சொல்லப்படும் ஆயுதங்களை கைப்பற்றினார்களா என்றால் கைப்பற்றவில்லை. போலிசார் விசாரணையின்போது வலது பக்க முதுகில் அடித்தாக சொல்லியுள்ளேன் என்றால் சொல்லியுள்ளேன். சம்பவம் நடந்த பின்னிட்டு மருத்துவமனைக்கு செல்லும் வழியில் எதிரிகள் வந்து அடித்தாக போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சொல்லியுள்ளேன். எனது மாமியாருக்கு தலையிலும், நெஞ்சிலும் தான் அடி என்றும் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் எனறால் தலையிலும், மூக்கிலும் அடி என்று சொல்லியுள்ளேன்.

2. போலிசார் விசாரணையின்போது எதிரிகள் வீட்டிற்குள் நுழைந்து பொருட்களை சேதப்படுத்தி நகைகள் எடுத்து சென்றதாக சொல்லியுள்ளேன் என்றால் சொல்லியுள்ளேன். மருத்துவமனையில் மருத்துவர் விசாரித்தபோது என்னை எத்தனை நபர்கள் அடித்ததாக சொல்லியுள்ளேன் என்றால் 5 நபர்கள் அடித்தாக சொல்லியுள்ளேன். எதிரிகளை நானும், எனது கணவரும் அடித்ததாக எங்கள் மீது புகார் கொடுக்கப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். ஆனால் நாங்கள் அடிக்கவில்லை. எங்களுக்கும், எதிரிகளுக்கு இடையே உள்ள நிலப்பிரச்சனை சம்மந்தமாக எதிரிகள் எங்களிடம் கேட்டபோது நாங்கள் எதிரிகளை அடித்துவிட்டு ஓடியபோதுதான் கீழே விழுத்தில்தான் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எங்கள் மீது பதிவு செய்யப்பட்ட வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக எதிரிகள் மீது பொய்யான புகார் வாக்குமூலம் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது கணவருக்கும், எனது மகனுக்கும், காயம் ஏற்பட்டதாக சொல்லியுள்ளபோது அவர்களும், என்னுடன் சேர்ந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார்கள் என்றால் சரிதான். வழக்கு எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை-இல்லை.